**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 2781/ஆ5/2023, நாள்.26.09.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – வடகிழக்கு பருவ மழையை முன்னிட்டு அனைத்து வகைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பு நலன் மற்றும் எவ்வித விபத்துக்கள் ஏற்படா வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து வகைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு அறிவுரை வழக்குதல் – தொடர்பாக

பார்வை
1. சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களின் இணைச் செயல்முறைகள் ந.க.எண்.079119/எம்/இ1/2023, நாள். 11.09.2023
2. இவ்வலுவக இதே எண்ணிட்ட கடித நாள். 13.09.2023

•••••

பார்வை 1–ல் காணும் செயல்முறைகளுக்கிணங்க தற்போது வடகிழக்கு பருவ மழைக் காலங்களில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் / மெட்ரிக் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மழைக்காலங்களில் ஏற்படும் விபத்துக்களிலிருந்து பாதுகாப்பதற்கென உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் கூடுதல் கவனம் செலுத்தி செயல்படுமாறும் அனைத்து தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. மழைக் காலங்களில் மாணவர்களும் , அவர்தம் உடைமைகளும் மழையில் நனையாமல் இருக்கும் பொருட்டு மழைக் கோட்டுகளையோ அல்லது குடைகளையோ பயன்படுத்த அறிவரை வழங்க வேண்டும்.
2. மாணவர்கள் மிதிவண்டிகளில் பள்ளிக்கு வரும்போது பாதுகாப்பாக வர அறிவுரை கூறவேண்டும். மாணவர்கள் காலை தங்கள் வீட் டிலிருந்து நேரடியாக பள்ளிக்கு வர வேண்டும் எனவும், அதே போல் பள்ளி நேரம் முடிந்த உடன் நேராக வீட்டிற்கு செல்ல அறிவுரை வழங்க வேண்டும்.
3. தொடர் மழை காரணமாக பள்ளியின் சுற்றுச்சுவர் மிகுந்த ஈரப்பதத்துடன் காணப்படலாம். எனவே, சுற்றுச்சுவர் உறுதி தன்மையை கண்காணிக்க வேண்டும். பழுதடைந்துள்ள சுற்றுச்சுவர் பகுதிகளைச் சுற்றி வேலி அல்லது தடுப்புகளை ஏற்படுத்திட வேண்டும்.
4. மழை நீர் ஒழுகுமாறு உள்ள கட்டிடம் , சேதமடைந்துள்ள கட்டிடங்கள் அருகில் மாணவர்கள் செல்லாதவாறு கண் காணிக்க வேண்டும் . பாதுகாப்பின்றி உள்ள வகுப்பறைகளில் மாணவர்களை உட்கார அனுமதிக்க கூடாது.
5. பள்ளியில் உள்ள அனைத்து கட்டிடங்களின் மேற்கூரைகள், கைப்பிடிகச்சுவர்கள் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் சன்னல் , கதவுகளுக்கு மேல் உள்ள கைப்பிடிச் சுவர்கள் உறுதியாக உள்ளனவா என்று அவ்வப்போது ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

6. மேற்கூரையில் நீர் தேங்காவண்ணம் உடனடியாக தேங்கியுள்ள நீரை வெறியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் . மேற்கூரையில் மரக்கிளைகள் , செடிகள் மற்றும் இலைச் சருகுகள் இருப்பின் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
7. மழையின் கா ரணமாக பள்ளியின் சில வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் பாதிக்கப்பட்டிருப்பின் அத்தகைய வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் பயன்படுத்தாமல் பூட்டிவைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது
8. அனைத்து மின் இணைப்புகள் சரியாக உள்ளனவா என்றும் , மின் கசிவு , மின்சுற்று கோளாறுகள் ஏதேனும் உள்ளனவா என்ப தை ஆய்வு செய்து பாதுகாப்பை உறுதிபடு த்திடவும், தேவையெனில் நேர்வுகளில் மின்வாரிய பொறியாளரை உடனடியாக தொடர்பு கொண்டு இதனை சரிசெய்திட அறிவுறுத்தப்படுகிறது. மின் மோட்டார்கள் அமைந்துள்ள இடங்கள் பாதுகாப்பாக உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது
9. பள்ளி வாளாகத்தில் ஆபத்தானநிலையில் உள்ள உயர்மின் அழுத்தமுள்ள மின்கம்பங்கள், மற்றும் அறுந்து தொங்கக்கூடிய மின்கம்பிகள் இருப்பின் அவைகளை உடனடியாக மின்வாரியத்தின் துணையுடன் அகற்றப்படவேண்டும்.
10. பழுதடைந்த அல்லது அறுந்து கிடக்கும் மின்கம்பிகளை மாணவர்கள் தொடுவதோ அல்லது மின்கம்பி வடம் பாதிப்பதற்கான பள்ளம் தோண்டியுள்ள பகுதிகளுக்கு அருகாமையில் செல்வதோ கூடாது என மாணவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் சுவிட்சுகள் (Switcher)சரியாக உள்ளனவா , மழைநீர் படாதவண்ணம் உள்ளனவா என்பதையும் தலைமையாசிரியர்கள் ஆய்வு செய்யவேண்டும் . பழுதடைந்த சுவிட்சுகள் உள்ள இடங்களில் மழைக்காலங்களில் மின்சாரம் செல்வதை தடைசெய்து வைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களைக் கொண்டு மின்சாதனங்களை கண்டிப்பாக இயக்கக்கூடாது
11. பள்ளி வளாகத்தில் உள்ள நீர்தேக்கப் பள்ளங்கள் , திறந்தவெளி கிணறுகள் , கழிவுநீர் தொட்டி மற்றும் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகள் இருக்கும் பட்சத்தில் அவற்றை மூடப்பட்ட நிலையில் உள்ளனவா என்று உறுதி செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது. பள்ளி வளாகத்தில் மழைநீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
12. மழைக்காலங்களில் இடி, மின்னல் போன்றவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள மாணவர்கள் மரங்களில் கீழ் ஒதுங்குவது கூடாது என மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தலைமையாசிரியர்கள் கோரப்படுகிறார்கள்.

13. மாணவர்கள் சாலையில் மழைநீர் கால்வாய்கள் பாதாள சாக்கடைக் குழிகள் இருக்கும் இடங்களில் கவனமாக செல்ல அறிவுறுத்த வேண்டும்.
14. பள்ளி வளாகத்தில் விழும் நிலையில் மரங்கள் ஏதேனும் இருப்பின் அதனை உடனடியாக அப்புறப்படுத்தப்பட வேண்டும்
15. மழைக்காலங்களில் சுட வைத்த நீரைப் பருக அறிவுறுத்த வேண்டும்

மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றி கூடுதல் கவனத்துடன் செயல்படுமாறு மீள அனைத்து வகை தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர்**
தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
அனைத்து வகை தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்
மற்றும் மெட்ரிக் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

**நகல்**

1. சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
   (மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) மூலமாக)